



தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




# களுவாஞ்சிக்குடியில் தமிழரசுக் கட்சியின் கூட்டம் – உள்ளூராட்சித் தேர்தலில் கட்சியின் நிலைப்பாடு வெளியீடு



தமிழ் தேசிய கூட்டமைப்பானது தமிழ் தேசிய கூட்டமைப்பாக வேறுபட்ட வழிகளை கையாள்வதற்கு பங்காளிக்கட்சியுடன் பேசுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சுமந்திரன் தெரிவித்தார். இலங்கை தமிழரசுக்கட்சியின் மத்திய குழு கூட்டம் நேற்று காலை மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் ஆரம்பமானது. களுவாஞ்சிகுடியில் உள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் அலுவலகத்தில் நேற்று (08) இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கட்சியின் தலைவர் மாவை சோ.சேனாதிராஜா தலைமையில் ஆரம்பமாகியது. இக்கூட்டத்தில் கட்சியின் பதில் செயலாளர் ப.சத்தியலிங்கம், சிரேஸ்ட உபதலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், நிர்வாகக் குழு, மத்தியகுழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த கூட்டத்தின் ஆரம்பத்தில் கட்சிக்கொடி தமிழரசுக்கட்சியின் தலைவரினால் ஏற்றப்பட்டதை தொடர்ந்து இலங்கை தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவர் இராசமாணிக்கம் அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டதை தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து கட்சியின் மத்திய குழு கூட்டம் ஆரம்பமானது.

கூட்டத்தில் கட்சியின் பல முக்கிய விடயங்கள், உள்ளூராட்சித் தேர்தல் விடயங்கள், பங்காளிக் கட்சிகளின் விடயதானங்கள் உள்ளிட்டவை கலந்துரையாடப்பட்டதுடன் குறித்த கூட்டம் தொடர்பில் சுமந்திரன் நடாத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பும் நடைபெற்றது. இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், உள்ளூராட்சிமன்ற தேர்தல் நடைபெறவுள்ள சூழ்நிலையில் அந்த தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்ற கருத்து பரிமாற்றம் நிகழ்ந்துள்ளது. வவுனியாவில் தமிழரசுக்கட்சியின் மத்திய குழு கூட்டம் நடைபெற்றபோது ஒரு சில கருத்துகள் பரிமாறப்பட்டிருந்தன. தற்போது அமுலில் உள்ள உள்ளூராட்சி முறைமைகளானது ஒரு குறித்த சபையில் ஒரு கட்சி அறுதிப்பெரும்பான்மை பெறுவது கடினமானது என்பதை நாங்கள் அனுபவத்தில் உணர்ந்திருக்கின்றோம்.

60 வீதம் வட்டாரத்திற்கும் 40 வீதம் விகிதாசாரத்திற்குமாக இருக்கின்றபோது வட்டாரத்தில் முழுமையாக வெற்றி பெற்றாலும் முழுமையாக அறுதிப்பெரும்பான்மையினை பெறுவது கஸ்டமாகும். சில அரசியல் கட்சிகள் சுயேட்சைக் குழுக்களை போட்டியிட வைத்து சில நூறு வாக்குகளைப்பெற்று ஆசனங்களை பெற்றதன் காரணமாக வட்டாரத்துடன் இணைந்து ஆட்சியமைப்பதற்கு உபயோகமாக இருந்திருக்கின்றது. நேற்று மட்டக்களப்பில் நடந்த கூட்டத்தில் எமது மாவட்ட கிளைகள் எட்டிலிருந்தும் கருத்துகள் பெறப்பட்டிருந்தன. சென்ற கூட்டத்தில் தீர்மானித்தன் படி ஒரு தொழில்நுட்ப ரீதியாக தமிழ் தேசிய கூட்டமைப்பில் உள்ள மூன்று கட்சிகளும் தேர்தலிலே போட்டியிட்டால் வட்டார கிளையில் ஒரு கட்சி வெற்றி பெறும் போது விகிதாசாரத்தில் இன்னுமொரு கட்சி வெற்றி பெற முடியும். அவ்வாறு செய்யும்போது ஒட்டு மொத்தமாக சபைகளை தமிழ் தேசிய கூட்டமைப்பு வெற்றிபெற கூடியதாகயிருக்கும்.

இது இலகுவாக எண்கணிதத்திலும் அனுபவத்திலும் கண்டுகொண்ட விடயம். இன்றுஎல்லாமாவட்டங்களிலிருந்தும்இலங்கைதமிழரசுக்கட்சியான தமிழ் தேசிய கூட்டமைப்பின் சின்னமான வீட்டு சின்னத்தில் தமிழரசுக் கட்சியில் போட்டியிடவேண்டும் எனவும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் உள்ள ஏனைய கட்சிகளும் அவ்வாறே போட்டியிடுவதும் சிறந்தது என கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் அனைவராலும் தெரிவிக்கப்பட்டது.

இதன் மூலம் தமிழ் தேசிய கூட்டமைப்பு கூடுதலான ஆசனங்களை பெறுவதற்கான வாய்ப்புகள் உண்டு என்ற கருத்து ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. எதிர்வரும் 10ஆம் திகதியளவில் தமிழ் தேசிய கூட்டமைப்பாக பங்காளிக்கட்சிகளுடன் இணைந்து பேச்சுவார்த்தையினை நடாத்துகின்றபோது நேற்று மத்திய குழுவில் ஏகமனதாக தெரிவிக்கப்பட்ட யோசனை முன்வைக்கப்படும். அவர்களோடு பேசி இதன் சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து முடிவெடுக்கப்படும். இங்கு ஊடகங்களிடம் நான் விசேடமாக தெரிவித்துக்கொள்வது என்னவென்றால் நாங்கள் எடுத்த தீர்மானம் தனித்துபோட்டியிடும் தீர்மானம் இல்லை. தமிழரசுக்கட்சி தனித்து போட்டியிடப் போகின்றது என்று தயவுசெய்து எழுதவேண்டாம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பாகத்தான் போட்டியிடுவோம் தமிழ் தேசிய கூட்டமைப்புகள் உள்ள மூன்று கட்சிகளையும் நன்மையான வகையில் உபயோகப்படுத்த முடியுமா என்றுதான் பார்க்கின்றோம். இல்லாதுபோனால் சுயேட்சைக்குழுக்களை வைத்து அந்த விகிதாசார ஆசனங்களை கைப்பற்றவேண்டிய நிலையேற்படும். தமிழ் தேசிய கூட்டமைப்புக்குள் மூன்று அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் இருக்கின்ற காரணத்தினால் அந்த மூன்று கட்சிகளையும் கொண்டு தமிழ் தேசிய கூட்டமைப்பு கூடிய ஆசனங்களைப்பெறலாம் என்பது அனைத்து கிளை உறுப்பினர்களின் கருத்தாகவுள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பு பிளவுபட்டுவிட்டது, தமிழரசு கட்சி வெளியேறிவிட்டது என்று ஊடகங்கள் பொய்ப்பிரசாரங்களை செய்யாமல் தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் தேசிய கூட்டமைப்பாகதான் தேர்தலை சந்திக்கும் ஆனால் தொழில்நுட்ப யுக்தியை கையாண்டு தமிழரக்கட்சியும் ஏனைய கட்சியும் தனியாக போட்டியிடும் போது சென்ற தடவை எதிர்கொண்ட சிரமங்களுக்கு முகங்கொடுக்க தேவையில்லை.

## அமெரிக்காவில் வேலைவாய்ப்பு

**550 இலங்கையர்களுக்கு. அமெரிக்காவில் தொழில் வாய்ப்புக்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக வொஷிங்டன் நகரில் உள்ள இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது. இதற்கமைவாக இலங்கையில் பதிவு செய்யப்பட்ட 250 தாதியர்கள். 100 இரசாயன ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர்கள். 200 தாதி உதவியாளர்கள் ஆகியோருக்கு அமெரிக்காவில் பணியாற்றுவதற்கான வாய்ப்புக் கிடைக்கும். இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக இது பற்றிய மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.**



## இன்று மழை பெய்யலாம்

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை மாவட்டத்திலும் பல தடவைகள் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் பல இடங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். **(வளிமண்டலவியல் திணைக்களம்)**

## தொடரை இழந்த இலங்கை வெற்றி வாகை சூடிய இந்தியா



இலங்கை மற்றும் இந்தியா அணிகளுக்கு இடையிலான ரி 20 தொடரை இந்திய அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது. மூன்றாவதும் இறுதியுமான தீர்க்கமான போட்டியில் இந்திய அணி 91 ஓட்டங்களால் வெற்றிப் பெற்றதை தொடர்ந்து தொடரை கைப்பற்றியுள்ளது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அவ்வணி சார்பில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய சூர்யகுமார் யாதவ் ஆட்டமிழக்காது 51 பந்துகளில் 112 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். 9 ஆறு ஓட்டங்கள் மற்றும் 7 நான்கு ஓட்டங்கள் அடங்களாக அவர் இந்த ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

சுப்மன் கில் 46 ஓட்டங்களையும் மற்றும் ராஹுல் திரிபதி 35 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் டில்சான் மதுசங்க இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

அதன்படி, 229 என்ற இமாலய வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 16.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. இலங்கை அணி சார்பில் தசுன் சானக்க மற்றும் குசல் மெந்திஸ் ஆகியோர் தலா 23 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் அர்ஷ்தீப் படேல் மூன்று விக்கெட்டுக்களையும் ஹர்திக் பாண்டியா, உம்ரன் மலிக் மற்றும் யுஸ்வந்தர சஹால் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

## இளைஞர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

வேட்புமனு கோரப்பட்டு எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் வழிகாட்டலில் பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவின் தலைமையில் இயங்கும் புதிய இலங்கை சுதந்திர கட்சியுடன் இணைந்து ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி தேர்தல் கூட்டமைப்பு ஒன்றினை ஏற்படுத்தி தேர்தலில் போட்டியிட தீர்மானித்துள்ளது. இந்த தேர்தலில் போட்டியிட ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்ட கிண்ணியா நகரசபை, கிண்ணியா பிரதேச சபை, புல்மோட்டை பிரதேச சபை, மூதூர் பிரதேச சபை, மட்டக்களப்பு மாவட்ட கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) பிரதேச சபை, ஏறாவூர் நகரசபை, காத்தான்குடி நகரசபை, அம்பாறை மாவட்ட கல்முனை மாநகர சபை, காரைதீவு பிரதேச சபை, நிந்தவூர் பிரதேச சபை, அட்டாளைசேனை பிரதேச சபை, அக்கரைப்பற்று மாநகர சபை, அக்கரைப்பற்று பிரதேச சபை, இறக்காமம் பிரதேச சபை, சம்மாந்துறை பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் புதிய இலங்கை சுதந்திர கட்சியுடன் இணைந்து ஸ்ரீலங்கா ஜனநாயக கட்சி சார்பில் களமிறங்க விருப்பமுடைய நன்னடத்தை கொண்ட இலங்கை அரசியலில் மாற்றத்தை விரும்பும் ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் பொது மக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் தங்கள் பற்றிய தகவல்களை 077 967 6390 அல்லது 075 7506564 அல்லது 076 673 5454 எனும் வாட்சப் இலக்கத்திற்கு உடனடியாக அனுப்பிவைக்குமாறும் மேலதிக விடயங்களை 076 673 5454 எனும் இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கபப்ட்டுள்ளது. மேலும் ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க தேவையில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு சமாதான நீதவான் பதவி

அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு சமாதான நீதவான் பதவி வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அறநெறி பாடசாலை ஆசிரியர் பொறுப்பில் பத்து வருட காலத்திற்கும் மேல் சேவை செய்தவர்களுக்கு இந்த பதவி வழங்கப்படவுள்ளது.

மூவாயிரத்து 200 அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கு சமாதான நீதவான் நியமனத்திற்கான கடிதம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் என்று நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அரசாங்க தகவல் திணைக்களம்)

## பாராளுமன்றத்திற்குள் வன்முறை வெடித்தது

பிரேசில் நாட்டில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் அதிபர் போல்சனேரோ தோல்வியடைந்தார். முன்னாள் அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா வெற்றி பெற்றார். இதையடுத்து, பிரேசிலின் புதிய அதிபராக லூயிஸ் பொறுப்பேற்றுக் கொண்டார். இதற்கிடையே, வாக்கு வித்தியாசம் மிகக் குறைவாக இருந்ததால் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளாத போல்சனேரோ தனது ஆதரவாளர்களுடன் அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.


இந்நிலையில், பிரேசில் பாராளுமன்றத்திற்குள் போல்சனேரோவின் ஆதரவாளர்கள் நுழைந்து வன்முறையில் ஈடுபட்டனர். ஜனாதிபதி மாளிகை, சுப்ரீம் கோர்ட் வளாகம் முன் திரண்ட போல்சனேரோ ஆதரவாளர்கள் தற்போதைய அதிபர் லூயிசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பி வருகின்றனர்.

தேர்தலில் போல்சனேரோ தோல்வியடைந்ததாக அறிவிக்கப்பட்ட நிலையில் அதை ஏற்றுக்கொள்ளாத அவரது ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தால் பிரேசிலில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

## மண்ணில் புதையும் புனித நகரம்

இந்தியாவில் உள்ள ஒரு முக்கிய இடம் தொடர்ந்து புதைந்து வருவது தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது. உத்தரகண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தின் ஜோஷ்மித் நகரம் இவ்வாறு மண்ணில் புதைந்து வரும் நிலையில் மரண பயத்தில் மக்கள் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து பிரதமர் அலுவலகம் பல்வேறு தரப்பு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளது. இதற்கமைய, ஜோஷிமத் நகரத்தின் பல பகுதிகளில் கட்டிடங்கள் விரிசல் ஏற்பட்டு பூமிக்குள் புதையுண்டுள்ளன. தற்போதைய நிலையில் சுமார் 600 கட்டிடங்கள் பூமிக்குள் புதையும் அபாயத்தில் உள்ளது. இதனால் ஜோஷிமத் நகரைவிட்டு மக்கள் பெருமளவில் வெளியேறி வருகின்றனர்.
அத்துடன் ஹெலிகாப்டர்களுடன் தேசிய பேரிடர் மீட்பு படை தயார் நிலையில் உள்ளனர். ஜோஷிமத் நகரம் புதையுண்டு போவதற்கு காரணம் இமயமலை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வளர்ச்சித் திட்டங்கள் என குற்றம்சாட்டப்பட்டுள்ளது.


## பெண்மை எனும் நூலின் அறிமுகம்

(நூருல் ஹுதா உமர்)

பாத்திமா ஸஹ்ரா நிஸ்பர் எழுதிய பெண்மை எனும் நூலின் அறிமுகம் அல்-மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்கா கல்முனை இணைப்பாளர் ஏ.ஆர்.எம். ஜௌஸானின் தலைமையில் இடம்பெற்றது.

நாட்டின் பல பாகங்களிலுள்ள நூலகங்களுக்கு அன்பளிப்பு செய்யும் முயற்சியின் மற்றுமொரு அன்பளிப்பாக கல்முனை வலயக்கல்வி அலுவலக பெண் உத்தியோகத்தர்களுக்கான பிரதிகளை பிரதிக்கல்வி பணிப்பாளர் ஜிஹானா ஆலிபிடம் அல்-மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளர் அடங்கிய குழுவினர் கையளித்தனர்.

"பெண்கள் அடுப்பங்கரைக்கு மட்டும் சொந்தமானவர்களல்ல" என்ற உறுதியான கருத்துக்களை கொண்ட வரியூடாக பெண்களின் உரிமையை வெளிப்படுத்தியுள்ள பெண்மை எனும் தலைப்பிடப்பட்டுள்ள இந்த நூல் 37 பக்கங்களை கொண்டுள்ளது. இந்த நூலில் பெண்களின் இயலுமைகள், உரிமைகள் எனப் பல விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளது.